## தியான மண்டபம் மற்றும் நூலகம்
## காலை 6.00 முதல் இரவு 8.00 மணிவரை
## இடைவேளை இன்றி திறந்திருக்கும்

தொடர் சொற்பொழிவுகள்

பிரதி மாதம் - முதல் சனிக்கிழமை மாலை 6.00 Dr. S.ராம் மோகன்

முதல் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 திரு. P.தியாகராஜன்

### விழிப்புணர்வு தியானம்

ரமண வழியைப் பயிலவேண்டி ஒவ்வொருமாதமும் முதல் ஞாயிறு அன்று காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை உள்முகத் தியான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இந்த சாதனையில் நாட்டம் உள்ளவர்கள் பங்கு பெறலாம்.

தனக்கு இயல்பாகவுள்ள குடும்பபாரம், தேகபாரம் முதலான யாவற்றையும், இறைவனிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்துவிட்டு, தான் கவலையற்று இருந்தால்தான் மனம் ஒரு முகப்படும். மனம் ஒருமுகப்படவில்லையென்றால் இறைவனிடம் பக்தி செய்யவோ, அல்லது ஆத்ம விசாரம் செய்யவோ மனம் தெளிவு பெறாது. தன் பாரமே தன்னால் சுமக்க முடியாத நிலைமையிருக்க, உலகத்தின் பாரத்தைத் தான் சுமந்து, அதைச் சீர்திருத்த எண்ணுவது கேலியும் பரிகாசமுமே ஆகும். உலகைப் படைத்த கடவுள்தான் அதைக்காத்து ரட்சிக்கிறான் என்பதைப் பரிபூரணமாக உணர வேண்டும்.

தன் சுமையை வண்டியில் வைத்துவிட்டுத் தானும் நிம்மதியாகப் பயணம் செய்கின்றான் விவேகி. விவேகமில்லாதவனோ தன் தலையில் அதைச் சுமந்து துன்பப்படுகிறான். - ஸ்ரீ ரமணர்

**2015 ஆம் ஆண்டு பௌர்ணமி கிரிவல நாட்கள்**

ஜனவரி 04 ஞாயிறு, பிப்ரவரி 03 செவ்வாய்,
மார்ச் 05 வியாழன், ஏப்ரல் 03 வெள்ளி,
மே 03 ஞாயிறு, ஜூன் 02 செவ்வாய், ஜூலை 01 புதன்,
ஆகஸ்ட் 29 சனி, செப்டம்பர் 27 ஞாயிறு,
அக்டோபர் 26 திங்கள், நவம்பர் 25 புதன்,
டிசம்பர் 24 வியாழன்





அவரவர் பிராரப்தப் பிரகாரம் அதற்கானவன் ஆங்காங்கிருந்து ஆட்டுவிப்பன். என்றும் நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது. நடப்பது என் தடை செய்யினும் நில்லாது. இதுவே திண்ணம். ஆகலின் மௌனமாயிருக்கை நன்று

- ஸ்ரீ ரமணர்

விறகினைச் சார்ந்திருக்கின்ற நெருப்பானது, விறகில்லாவிடில் எப்படித் தானே அணைந்துவிடுமோ அதைப்போன்றே, பற்றுவதற்குரிய விஷயங்கள் இல்லாமல் போனால் பலவற்றை நினைந்து அலையும் மனமும், தானே ஓய்ந்து சாந்தியை அடைந்துவிடும். மனமானது எவ்விதத்திலும் சிறிதேனும் அசையுமேயானால் அதுவே சம்சாரமாகிறது. அசையாமல் நிற்குமேயானால் அதுவே முக்தியாகும்.


## ரமணாலயம்
UNIT OF SRI RAMANASRAMAM
## ஒரு ரமண மையம்
புதிய எண்.6, பழைய எண்.85,
ராஜேந்திர பிரசாத் சாலை, நேரு நகர்,
குரோம்பேட்டை, சென்னை 600 044
E-mail : arunamramanam@gmail.com
For all updates and events visit www.ramanalayam.org
தொடர்பு : 9444261296 / 9884055764 / 9789995970



## தினப் பாராயணம்

நாள்தோறும் இரவு 6.45 முதல் 7.30 வரை பகவான் அருளிய / தமிழ்ப் படுத்திய கீழ்க்கண்ட உபதேசப் பாடல்கள் பாராயணம் நடைபெறுகிறது. பாராயணத்தின் முடிவில் பகவானைப் பற்றிய நூல்கள் வாசிக்கப்பட்டு தியானப் பாட்டும் பாடப்படுகிறது.

| | |
|---|---|
| திங்கள் | ஸ்ரீ அருணாசல ஸ்துதிபஞ்சகம்<br>[அருணாசல அக்ஷரமணமாலை அடங்கியது] |
| செவ்வாய் | உபதேச உந்தியார்<br>உள்ளது நாற்பது<br>உள்ளது நாற்பது அனுபந்தம் |
| புதன் | ஏகான்ம விவேகம்<br>அப்பளப் பாட்டு<br>ஆன்ம வித்தை<br>தேவிகாலோத்தர - ஞானாசார விசாரப் படலம் |
| வியாழன் | சர்வ ஞானோத்தரம் -<br>ஆன்ம சாட்சாத்காரப் பிரகரணம்<br>பகவத் கீதாசாரம் |
| வெள்ளி | தக்ஷிணா மூர்த்தி தோத்திரம்<br>ஆன்ம போதம்<br>குருஸ்துதி<br>அத்தாமலகம் |
| சனி | சத்தியமங்கலம் வேங்கடரமணய்யரின் -<br>ஸ்ரீ ரமண ஸ்துதி பஞ்சகம்<br>[ரமண சத்குரு ராயனே அடங்கியது] |
| ஞாயிறு | சிவபுராணம் [மணிவாசகர்]<br>ரமண புராணம் |

பகவான் ஸ்ரீ ரமணரின் ஜென்ம நட்சத்திரம் புனர்வசு. புனர்வசு நாள் ஒவ்வொரு மாதமும் மாலை 5.00 மணிமுதல் இரவு 7.30 மணிவரை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

## 2015ம் ஆண்டு நிகழ்வுகள்

### புனர்வசு நாட்கள் (Punarvasu Days)

| | | |
|---|---|---|
| செவ்வாய் | 06.01.2015 | 135வது ரமண ஜயந்தி |
| திங்கள் | 02.02.2015 | |
| ஞாயிறு | 01.03.2015 | |
| சனி | 28.03.2015 | |
| சனி | 25.04.2015 | |
| வெள்ளி | 22.05.2015 | |
| வியாழன் | 18.06.2015 | |
| வியாழன் | 16.07.2015 | |
| புதன் | 12.08.2015 | |
| செவ்வாய் | 08.09.2015 | |
| செவ்வாய் | 06.10.2015 | |
| திங்கள் | 02.11.2015 | |
| ஞாயிறு | 29.11.2015 | |
| ஞாயிறு | 27.12.2015* | 136வது ரமண ஜயந்தி |

### இம்மையத்தில் அனுஷ்டிக்கப்படும் சிறப்பு நிகழ்வுகள் 2015

| | | |
|---|---|---|
| செவ்வாய் | 06.01.2015 | 135வது ரமண ஜயந்தி |
| செவ்வாய் | 17.02.2015 | மகாசிவராத்திரி |
| வியாழன் | 16.04.2015 | பகவான் 65வது ஆராதனை |
| புதன் | 10.06.2015 | மகா பூஜை தாயார் ஆராதனை |
| ஞாயிறு | 28.06.2015 | பசுலக்ஷ்மி நாள் |
| வெள்ளி | 31.07.2015 | குரு பூர்ணிமா |
| செவ்வாய் | 01.09.2015 | அருணை விஜய விழா |
| புதன் | 25.11.2015 | அண்ணாமலை தீபம் |
| ஞாயிறு | 27.12.2015 | 136வது ரமண ஜயந்தி |